சக்தி பௌண்டேஷன்
தமிழ் CCC வகுப்பு
# பாண்டுரங்கன்

---

மஹாராஷ்ட்ராவில் இருக்கிறது பண்டரிபூர். அக்காலத்தே அவ்வூரின் மக்களுக்கு அந்தப் பையனைக் கண்டால் ஒரே பயம், கோபம், எரிச்சல் எல்லாம் வரும். அவன் தான் புண்டரீகன்.

பின்னே? அவனைவிட வம்பும் குறும்பும் கொண்டவர் யார்? அவன் தொல்லை வீட்டோடு மட்டும் அல்லாமல் ஊருக்குள்ளும் உலாவியது. திருடுதல், மாடுகளை அடித்து அவிழ்த்து விடுதல், தண்ணீர்ப் பானைகளை உடைத்தல், குளத்தில் குளிப்பவர்களின் துணிகளைக் களவாடுதல் என அவன் தொல்லை அதிகம் ஆனது.

படிக்கவில்லை, பள்ளிக்கூட வாத்தியார் அவனை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். அப்பா - அம்மா ஏதாவது சொன்னால் உடனே எதிர்ப்பான் அல்லது அடித்தே விடுவான். காலம் கழிந்தது. புண்டரீகன் கட்டுமஸ்தான உடம்புடன் வளர்ந்து இளம் வாலிபன் ஆனான். கல்யாணம் செய்து வைத்தால் பொறுப்பு வரும் என்று யாரோ சொன்னார்கள் என்று அவனுக்கு ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்தார்கள், வம்பை வரவேற்றுக் கொண்டார்கள்.

கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து ஊருக்கும் வீட்டுக்கும் தொல்லை தர ஆரம்பித்தனர். மாமியாரும் மாமனாரும் அடிபட்டுச் சீரழிந்தனர். ஆனால் அவன் பெற்றோர் சதா இறைவனையே வேண்டினர். தன் மகன் திருந்தி நல்லவனாக வாழ அருள வேண்டினர்.

ஒரு சமயம் அவ்வூருக்கு ஒரு பெரிய பக்தர்கள் கூட்டம் வந்து தங்கியது. துவாரகைக்குச் செல்லும் கூட்டம் அது. சதா இறைவனின் பஜனைகளைப் பாடி மக்களை ஈர்த்தது அக்கூட்டம். பலர் அவர்களுக்கு உதவினர். அதில் ஒரு பெரியவர் புண்டரீகனும் அவன் அருமை மனைவியும் செய்யும் அட்டகாசங்களைக் கண்டு வியந்தார், வருந்தினார்.

ஒரு நாள் புண்டரீகனின் பெற்றோர் அப்பெரியவரை வீட்டிற்கு அழைத்து இருந்தனர். வந்த பெரியவர் முன் அவனும் அவன் மனைவியும் மிகவும் சாதுவாக நடந்து கொண்டனர். சிறிது பஜனைகள் செய்த பெரியவர் புண்டரீகனைப் பார்த்து,

” புண்டரீகா! அடுத்த ஜென்மதில் நீ என்ன ஆக இருக்கிறாய் என்று பார்க்க ஆசையா?” என்று கேட்டார். அவனும் மிகுந்த ஆசையுடன் சரி என்று சொல்ல; பெரியவர் தன் சக்தியால் அவனை ஒரு தட்டத்தைப் பார்க்க வைத்தார்.

அதில் அவனும் அவன் மனைவியும் நாய்களாய்ப் பிறந்து சீரழிவதைக் கண்டனர். நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் என்ன பலன் என்பதை அப்போது தான் அவர்கள் முதன்முதலில் உணர்ந்தனர். மனம் கலங்கினர், பெரியவரை வணங்கி அதில் இருந்து மீள மாற்றுவழி கேட்டனர்.

”மனம் மாறித் திருந்துவதே மிக உயர்ந்த வழி. அதிலும் உன் வயதான பெற்றோருக்கு வேண்டிய சேவையைச் செய்யும் போது அதுவே நீ செய்த பல பாபச் செயல்களுக்குப் பரிகாரம். அத்துடன் பகவானின் நாமத்தையும் ஜெபித்து வா. முடிந்தால் துவாரகாவிற்குச் சென்று ஸ்ரீக்ருஷ்ணனைப் பார்த்து வா...” என்று கூறினார்.

மனம் மாறிய தம்பதியர் மிக்க பொறுப்புடன் வாழத் தொடங்கினர். அல்லும் பகலும் சரியாக வேலை செய்து உழைத்தனர், சம்பாதித்தனர், பெற்றோர்களுக்கு வேண்டிய பணிவிடை செய்தனர். காலம் சென்றது. இவர்களுக்குள் துவாரகா சென்று ஒரு முறையாவது க்ருஷ்ணனைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் வலுபெற்று வந்தது. ஆனால் வேலைகளும் பெற்றொர் பணியும் அவர்களுக்கு அந்த வாய்ப்பே தரவில்லை. பெற்றோர் மகிழ்ந்து ஆசீர்வதித்தனர், ஊர் போற்ற எளிய ஆனால் இனிய வாழ்க்கையைப் புண்டரீகன் வாழ்ந்தான்.

இந்நிலையில் ஒருநாள் பலத்த மழை, புண்டரீகனின் பெற்றோர்களுக்குக் குளிர் கண்டு விட்டது. கணவனும் மனைவியும் மாறிமாறி மருத்துவ உதவி செய்தனர். ஒருவாறு குளிர் அடங்கிப் பெற்றோர்கள் உறங்கத் தொடங்கினர். புண்டரீகன் அவர்களுக்கு ம்ருதுவாக மசாஜ் செய்தபடி இறைவனை த்யானித்துக் கண் மூடி இருந்தான். அருகில் அவன் மனைவி படுத்துக் கிடந்தாள்.

யாரோ கதவைத் தட்டும் சப்தம். மனைவி கண் திறந்தாள்.

” ஏங்க யாரோ இந்நேரத்துல வந்திருக்காங்க, பாருங்க..”

புண்டரீகன் உடனே சற்று குரலை உயர்த்தி,
” தயது செய்து யார் வெளியே இருந்தாலும் சற்று பொறுங்க! என் பெற்றோர் உறங்கட்டும் வரேன்…” என்றான்.

வெளியே இருந்து ஒரு குரல்,
” புண்டரீகா! நான் நீ வரவர காத்திருக்கேன், ஒரே மழைத் தண்ணீரா இருக்கே! நிற்கக் கூட இடமில்லப்பா…”

புண்டரீகன், ”அங்க அடுக்கி வச்சிருக்கற செங்கல் மேல ஏறி நனையாம நில்லுங்க, வரேன்” என்றான்.

நேரம் சென்றது. பெற்றோர் உறங்கினர். புண்டரீகன் தன் வீட்டுக்கு வந்த அர்த்தராத்ரி விருந்தாளியை வரவேற்கக் கதவைத் திறந்தான். இருட்டில் ஒன்றுமே விளங்கவில்லை.

”யார்? வந்தது? செங்கல் மேலே நிற்கச் சொன்னேனே? யாரும் இல்லையா?” என்று குரல் கொடுத்தவுடனே,

” ஹே புண்டரீகா! நீ காட்டிய செங்கல் மேல் இதோ நிற்கிறேன்! கண் தெரியலையா?” என்ற குரல் கேட்டது.

வியந்த புண்டரீகன் சற்று பார்க்க அங்கே ஸ்ரீக்ருஷ்ணர் இரண்டு கைகளையும் இடுப்பில் ஊன்றியபடி செங்கற்கள் மீது நின்று கொண்டிருந்தார். அதைக் கண்ட புண்டரீகன்,



”ஹே! க்ருஷ்ணா! என் தெய்வமே உன்னையா இவ்வளவு நேரம் காக்க வைத்து விட்டேன்?” என்று அழுது துடித்தான்.

” புண்டரீகா! கண் கண்ட தெய்வங்களாம் பெற்றோர்களுக்கு முன் நான் யாரப்பா!? உன் பெற்றோர் சேவை என்னை உன்னைப் பார்க்க அழைத்து வந்து விட்டது. உன்னைப் போல் யார் ஒருவர் தன் பெற்றோரை நன்கு கவனித்துக் கொள்கிறாரோ அவருக்குள் நான் சதா கோயில் கொள்கிறேன். நீ வேண்டும் வரம் என்னவோ? தருகிறேன்!” என்றார் க்ருஷ்ணர்.

”ப்ரபோ! யார் ஒருவர் உண்மையான பெற்றோர் சேவை செய்தாலும் அவர்களுக்கு நீ அருள வேண்டும். மேலும் உலக மக்களின் நலனுக்காக நான் பார்த்த இந்த கோலத்திலேயே நீ இங்கே கோயில் கொண்டு அருள வேண்டும்!”
என்று சற்றும் சுயநலமில்லாமல் வேண்டிக் கொள்ள அன்று முதல் இன்று வரை புண்டரீக வரதனாக பாண்டுரங்கனாக விட்டலனாக க்ருஷ்ணன் கோயில் கொண்டு வாழ்கிறார்.

இன்று சதா அவரை பக்தர்கள் பஜனைகள் மூலம் பாடிப்பாடி வழிபடுகிறார்கள், தொட்டும் வணங்குகிறார்கள். பெற்றோர்களை அன்புடன் பேணும் நம் ஒவ்வொருவருக்குள்ளும் பாண்டுரங்கன் நம் மனமாகிய செங்கல் மீது ஏறி நின்று வாழ்த்துகிறான்.

இக்கதையின் முடிவில் பஜனை செய்தல் மிக்க பலனைக் கொடுக்கும்.

”விட்டல பாண்டுரங்க! விட்டல பாண்டுரங்க!” என்ற நாம ஜெபத்தை அழகாகக் கூறி வழிபடவும்.